**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.581/ஆ5/2025, நாள்.20/02/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – HDFC ERGO INSURANCE விழிப்புணர்வு விருது ஜூனியர் 2025 – வினாடி வினா போட்டிகள் – அரசு பள்ளிகளில் 8ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பிரிவில் பங்கேற்க அழைப்பு – தலைமையாசிரியர்களுக்கு தகவல் தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடித ந.க.எண். 000736/எம்2/இ2/2025, நாள். 30.01.2025

.....

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி, மாணவர்கள் தங்கள் பாடப்புத்தகங்களுக்கு அப்பால் சென்று காப்பீடு தொடர்பான வழிப்புணர்வு ஏற்படுத்திட HDFC ERGO நிறுவனம் செயல்படுகிறது. காப்பீடு நிறுவனத்தால் ஜூனியர் வினாடி வினா போட்டிகள் 2016 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருவதாகவும், தற்போது தமிழகத்திலுள்ள பள்ளி மாணவர்களும் பங்கு பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் அரசு பள்ளிகளில் பயிலும் 8ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு மாணவர்கள் தகுதியுடையவர்களாவர். ஆரம்ப சுற்று பிப்ரவரி மாதம் இறுதி வாரத்திலும் (Online) மூலமும், மண்டல சுற்று மார்ச் மாதம் முதல் வாரத்திலும் (Zoom) மூலமும் நடைபெறுவதாகவும் கிராண்ட்ஸ் டேட் பைனல் சென்னையில் நேரில் நடக்கும் நிகழ்வு மார்ச் மாதம் இரண்டாம் வாரத்தில் நடைபெறுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியும் 1 முதல் 3 குழுக்களை பதிவு செய்திடலாம். இப்பொருள் சார்ந்து பெறப்பட்ட விவரங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இத்துடன் இனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணைப்பு – கடித நகல்

20.02.25

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)